## இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டக் கூறு – II - 2017

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டக் கூறு – II இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அதேநேரம் மாகாண மட்டத்தின் நடவடிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2013–2017 ஆண்டிற்கான தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கு இயன்றதாக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) ஆனதுடன் அதில் ரூபா 1,263.5 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 6.5 மில்லியன் (ஐ.அ.டொலர் 10 மில்லியன்) செயற்திட்டத்தின் கூறு – II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தனியாக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கூறு – II இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துரைகளை உள்ளடக்கியிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று

ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

போதனா வைத்தியசாலைகளின் பணியாளர்களுக்கு செயற்திட்டத்தினால் அளிக்கப்பட்ட ரூபா 6.33 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினூடாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக, 16 நாட்கள் தொடக்கம் 348 நாட்கள் வரையான வீழ்ச்சியுடைய காலப்பகுதியொன்றுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது தொடர்ந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2017 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ கூறு – II | 10 | 1,263.50 | 530.00 | 3.01 | 460.76 | 5.33 | 817.22 |
| **மொத்தம்** | **10** | **1,263.50** | **530.00** | **3.01** | **460.76** | **5.33** | **817.22** |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,263.50 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 64.68 சதவீதத்தை பிரதிநிதித்துவபடுத்துகின்ற ரூபா 817.22 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 5.33 மில்லியன் தொகை மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 ஆண்டுகள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் மிகுதியாகவுள்ள 01 வருட காலப்பகுதியின் போது முழு ஒதுக்கீட்டினையும் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஐயத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது கண்டுபிடித்தல், பெறுபேறுகளினை கண்காணித்தல் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் எனப் பெயரிடப்பட்ட 03 உபகூறுகளினைக் கொண்டுள்ளது. அந்த இலக்குகளின் அடைதல் தொடர்பான விபரங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) சுகாதார துறையிலுள்ள நிபுணர்களிடமிருந்து 69 புத்தாக்க எண்ணங்களுக்காக செயற்திட்டமானது முன்மொழிவுகளைப் பெற்றிருந்ததுடன், அந்த ஆராய்ச்சி செயற்பாடுகளில் 34 முன்மொழிவுகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 399.31 மில்லியன் கிரயமொன்றில் நடாத்திச் செல்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 40 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 158.94 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்திட்டத்தினால் அவற்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆரம்பிக்கப்பட்ட 34 ஆராய்ச்சிகளின் செயற்பாடுகளில், 03 முன்மொழிவுகளின் கீழுள்ள ஆராய்ச்சிகள் மீளாய்வாண்டின் இறுதியில் இறுதி அறிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், செயற்திட்டத்தின் மீதமாகவுள்ள 01 வருட காலப்பகுதியின் போது முழுமையான ஆராய்ச்சி வேலைகளின் பூர்த்தியாக்கலின் சாத்தியக்கூறு சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

(ii) ஆராய்ச்சி செயற்பாடுகள் ஆராய்ச்சி மீளாய்வுக் குழுவினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படல் வேண்டுமென வேண்டப்படுகின்ற போதிலும், 03 ஆராய்ச்சிகள் ஆராய்ச்சி மீளாய்வு குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்ட நிபுணர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், மற்றுமொரு மருத்து உத்தியோகத்தர் ஒரே நேரத்தில் 02 ஆராய்ச்சிகளினை மேற்கொண்டிருந்ததுடன் எவ்வித ஆராய்ச்சிகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கான உள்ளூர் பயிற்சி மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி பட்டறைகளுக்கு கூட்டிணைந்த திட்டத்தில் ரூபா 672.74 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீடுகளில் 62 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 418.95 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையினால், செயற்திட்டத்தின் மீதமாகவுள்ள 01 வருட காலப்பகுதியின் போது இயலுமையைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களின் முழுமையான பூர்த்திக்கான சாத்தியச்கூறு சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இயலுமையைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள குறிப்பு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் விலை மதிப்பீடுகளில் அரச சுகாதார துறையிலுள்ள 1,080 உத்தியோகத்தர்களுக்கு செயற்திட்டக் காலப்பகுதியின் போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தொடர்புடைய பயிற்சி பாடநெறி நடாத்தப்பட்டிருந்தது.

(ii) இயலுமையைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அரச சுகாதார துறையிலுள்ள 2,100 உத்தியோகத்தர்களுக்கு பட்டியல்படுத்தப்பட்ட இணைய (On-line) குறுகிய பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133(2) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தனியாக தயாரிக்கப்பட்டிருந்தமை மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டமை தொடர்பில் கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளும் கிடைக்கப்பெறவில்லை. 2017 ஆகஸ்ட் 14 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் செயற்திட்டத்தினால் உள்ளகக் கணக்காய்வாளரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 01 இல் மேற்கொள்ளப்பட்ட அவரின் பதவி விலகல் வரை உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் நடாத்தப்பட்டமைக்கு எவ்வித சான்றுகளும் பெறப்பட்டிருக்கவில்லை.